**1. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை, தரப்பட்டுள்ள நான்கு விடைகளுக்குள் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக:**

1. தமிழும் மிகத் தொன்மையான மொழி என நிறுவிய மொழியியல் அறிஞர் யார்?

அ) கம்பர் ஆ) நாவலர்
இ) தேவநேயப்பாவாணர் ஈ) பாரதியார்

2. செய்யுள், உரைநடை இலக்கியங்களைக் குறிக்கும் சொல் எது?

அ) இயற்றமிழ் ஆ) முத்தமிழ்
இ) இசைத்தமிழ் ஈ) நாடகத்தமிழ்

3. காய்ந்த நிலையில் உள்ள இலையின் பருவப் பெயர் எது?

அ) தளிர் ஆ) பழுப்பு
இ) சருகு ஈ) கொழுந்து

4. மேடையேற்றுமுன் ஒரு நிகழ்ச்சியை நடத்திச் சரி பார்ப்பது?

அ) ஒத்திகை ஆ) வெளியீடு
இ) அரங்கேற்றம் ஈ) மேடையேற்றல்

5. தமிழிலுள்ள சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கை?

அ) அறுபத்து நான்கு ஆ) நானூறு
இ) தொண்ணூற்றாறு ஈ) நூற்றெட்டு

6. நாளை பிற்பகல் மாவீரர் விழாவுக்குச் செல்வோம். இதில் உள்ள தோன்றா எழுவாய்?

அ) நீங்கள் ஆ) மாணவர்
இ) அவர்கள் ஈ) நாங்கள்

7. மணிமேகலையை இயற்றியவர் யார்?

அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைச்சாத்தனார்
இ) திருத்தக்கதேவர் ஈ) நாதகுத்தனார்

8. கருப்புக் காகம் வெள்ளை முட்டையிட்டு நன்றாய் அடைகாக்கும். இதிலுள்ள செயப்படுபொருள அடைமொழி எது?

அ) கருப்பு ஆ) நன்றாய்
இ) வெள்ளை ஈ) அடை

9. தேம்பாவணி என்பது எச்சமய இலக்கியமாகும்?

அ) இந்து சமயம் ஆ) இசுலாமிய சமயம்
இ) கிறீத்தவ சமயம் ஈ) வைணவ சமயம்

10. புதிய தேர் , கப்பல் முதலியவற்றை செய்து முதன்முதலாக ஓடவிடுவது?

அ) ஒத்திகை ஆ) வெள்ளோட்டம்
இ) முதலோட்டம் ஈ) ஆரம்பவோட்டம்

11. தமிழரின் வீரத்தை விதந்து கூறும் பாடல்கள் கொண்ட நூல் எது?

அ) அறநானூறு ஆ) புறநானூறு
இ) சிலப்பதிகாரம் ஈ) குண்டலகேசி

12. ஒரு சொல்லியத்தில் இரண்டாம் வேற்றுமை ஏற்று வரும் பகுதி?

அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள்
இ) பயனிலை ஈ) அடைமொழி

13. புலவரின் கவியாற்றலைக் கண்ட மன்னன் பாராட்டினான். இதிலுள்ள தோன்றாச் செயப்படுபொருள் எது?

அ) கவியாற்றல் ஆ) மன்னன்
இ) புலவர் ஈ) பாராட்டினான்

14. ஒரு சொல்லியத்தின் உறுப்புகள் எனச் சொல்லப்படுபவை எவை?

அ) எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆ) இயல்,இசை, நாடகம்
இ) பெயர்ச்சொல், வினைச்சொல் ஈ) தீந்தமிழ், பைந்தமிழ்

15. பண்டாரவன்னியனின் முழுப்பெயர் என்ன?

அ) குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் ஆ) குலசேகர முதலி பண்டாரவன்னியன்
இ) விக்கிரம இராசசிங்க பண்டாரவன்னியன் ஈ) கயிலாயபதி பண்டாரவன்னியன்

16. பண்டாரவன்னியனை அந்நியருக்கு காட்டிக் கொடுத்த இரண்டகன் யார்?

அ) கதிர்காமநாயகம் ஆ) லக்மன் கதிர்காமர்
இ) குலசேகரம் வைரமுத்து ஈ) பனங்காமன்

17. போரில் இருதடவைகள் பண்டாரவன்னியனிடம் தோற்றோடிய படைத்தளபதி யார்?

அ) கப்டன் மில்ரன் ஆ) எட்வேட் மெச்சின்
இ) கப்டன் வொன் றிபேக் ஈ) யோன் யுவல்

18. பண்டாரவன்னியனுக்கான நடுகல் எவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ளது?

அ) யாழ்ப்பாணம் ஆ) முள்ளியவளை
இ) கற்சிலைமடு ஈ) மன்னார்

19. நிலமெல்லாம் நன்னீர், பாரெல்லாம் செந்நெல், பார்க்குமிடமெல்லாம் மலர்கள். இது எந்தப் பருவகாலம்?

அ) முன்பனிக்காலம் ஆ) கோடைகாலம்
இ) கார்காலம் ஈ) பின்பனிக்காலம்

20. ‘எழில்’ என்ற சொல்லின் ஒத்த சொல் எது?

அ) காட்சி ஆ) புதுமை
இ) அழகு ஈ) காடு

21. ஊராரின் செல்லத்தில் செருக்கோடு மலரும் மலர் எது?

அ) சூரியகாந்தி ஆ) முல்லை
இ) ஆம்பல் ஈ) தாமரை

22. ஔவையாருக்கு நெல்லிக்கனி கொடுத்த மன்னன் யார்?

அ) பாண்டியன் ஆ) சேரமான்
இ) பாரி ஈ) அதியமான்

23. ‘அடவி’ என்பதன் பொருள் என்ன?

அ) இல்லம் ஆ) காடு
இ) நாடு ஈ) வானம்

24. அதியமான் தலைநகராகக் கொண்டு ஆண்ட ஊர் எது?

அ) அதியர்குடி ஆ) தகடூர்
இ) புலியூர் ஈ) மரூர்

25. ஔவையின் ஆயுள் வளர்ந்தால் எது வளரும்?

| | | | |
|---|---|---|---|
| அ) | தமிழ் | ஆ) | செல்வம் |
| இ) | வறுமை | ஈ) | சிறப்பு |

26. மாளிகைக்கு வந்தவுடன் நெடுமானஞ்சி யாரை அழைத்தான்?

| | | | |
|---|---|---|---|
| அ) | பாரி | ஆ) | சேரமான் |
| இ) | ஔவையார் | ஈ) | எல்லாளன் |

27. 'மோர்' என்று பெயர் படைத்தது எங்கே?

| | | | |
|---|---|---|---|
| அ) | வானத்தில் | ஆ) | நிலத்தில் |
| இ) | கடலில் | ஈ) | ஆய்ச்சியர் கையில் |

28. வசைக்கவி பாடுவதில் சிறந்த புலவர் யார்?

| | | | |
|---|---|---|---|
| அ) | கம்பர் | ஆ) | ஔவையார் |
| இ) | காளமேகப்புலவர் | ஈ) | ஒட்டக்கூத்தர் |

29. காளமேகப்புலவர் வாழ்ந்த காலப் பகுதி எது?

| | | | |
|---|---|---|---|
| அ) | 18ம் நூற்றாண்டு | ஆ) | 15ம் நூற்றாண்டு |
| இ) | 10ம் நூற்றாண்டு | ஈ) | 12ம் நூற்றாண்டு |

30. 'அன்னசத்திரம்' என்பது எதைக் குறிக்கும்?

| | | | |
|---|---|---|---|
| அ) | அங்காடி | ஆ) | சமையலறை |
| இ) | வழிப்போக்கருக்கு உண்டியும் உறைவிடமும் கொடுக்குமிடம் | ஈ) | தண்ணீர்ப்பந்தல் |

( 30 புள்ளிகள் )

**உ. கீழே தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு முழுவிடை தருக:**

1. முத்தமிழும் எவை? அதில் ஒன்றை எடுத்து விளக்குக:

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------.

2. போர்த்துக்கேயரினால் அமைக்கப்பட்ட இரு கோட்டைகளும் எவை?

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------.

3. கார்காலத்தில் மலர்ந்திருந்த மலர்கள் என கவிஞர் குறிப்பிடும் மலர்வகைகளைத் தருக:

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------.

4. அதியமான் நெல்லிக்கனியை தான் உண்ணாமல் ஔவைக்கு கொடுத்த காரணம் யாது?

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------.

5. காளமேகம் என்றால் என்ன? விளக்கம் தருக:

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------.

(15 புள்ளிகள் )

**3. கீழே தரப்பட்டுள்ள இலக்கண வினாக்களுக்கு விடை தருக:**

1. 'மலர்விழி ஆடை அணிந்திருந்தாள்' இச்சொல்லியத்தில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் முதலியவற்றுக்கு அடைமொழிகளைச் சேர்த்து சொல்லியத்தை எழுதுக:

-------------------------------------------------------------------------------------------

-------------------------------------------------------------------------------------------

-------------------------------------------------------------------------------------------.

2. 'மாணவனின் திறமையைக் கண்ட அதிபர் பாராட்டினார்' இச்சொல்லியத்தில் உள்ள தோன்றாச் செயப்படுபொருளை கண்டு எழுதுக:

-------------------------------------------------------------------------------------------

-------------------------------------------------------------------------------------------.

3. 'மரத்தில் இருந்து பழம் விழுந்தது' இச்சொல்லியத்தில் உள்ள வேற்றுமை உருபு எது? எத்தனையாம் வேற்றுமை? எப்பொருளில் வந்துள்ளது?

-------------------------------------------------------------------------------------------

-------------------------------------------------------------------------------------------

-------------------------------------------------------------------------------------------.

4. பறவை கூட்டை விட்டு வெளியே வந்தது, உயரப் பறந்தது, அது இரை தேடி அலைந்தது. இத் தனிச் சொல்லியங்களைக் கூட்டுச் சொல்லியமாக மாற்றி எழுதுக :

-------------------------------------------------------------------------------------------

-------------------------------------------------------------------------------------------

-------------------------------------------------------------------------------------------.

5. "உங்களில் கலைமகளே நன்கு ஆடுவாள்" இச் சொல்லியத்தில் உள்ள இடைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக? அவை எவ்வகை என்பதையும் எழுதுக?

-------------------------------------------------------------------------------------------

-------------------------------------------------------------------------------------------

-------------------------------------------------------------------------------------------

-------------------------------------------------------------------------------------------.

(15 புள்ளிகள் )

6. கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக:

அருமையாய்க் கிடைத்திட்ட இக்கனியுண்டால்
ஆயுள் நீளுமென்று அடவியில் துறவி சொன்னார்
அடியேனின் உயிர் அதிக நாள் இருந்தென்ன பயன்?
அவ்வையின் ஆயுள் வளர்ந்தால் தமிழ் வளரும்.
தகடூரின் பெயர் உள்ளளவும் நான் வாழ்வேன்.
தமிழ் உள்ளளவும் வாழ்க அவ்வையே என்றான்.

1. ஆயுள் நீளுமென்று அடவியில் யார் சொன்னது?

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------.

2. அடியேனின் உயிர் அதிக நாள் இருந்தென்ன பயன் இது யாரால், யாருக்கு கூறப்பட்டது?

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------.

3. ஔவையின் ஆயுள் வளர்ந்தால் எது வளரும்?

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------.

4. எதை உண்டால் ஆயுள் நீளும்?

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------.

5. ஒத்த சொல் தருக: 1. கனி 2. ஆயுள்

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------.

(10 புள்ளிகள் )

7. **கீழே நோர்வேஜிய மொழியில் தரப்பட்டிருக்கும் பந்தியை வாசித்து தமிழில் மொழிமாற்றம் செய்து எழுதுக:**

De fleste i Norge er vant med å ha nok mat. Vi kan velge mellom forskjellige matretter og spise oss mette.

Norge er et lite jordbruksland. Landet ligger langt nord, og vi har mye fjell. Bare omtrent 3 prosent av landet kan brukes til jordbruk. Naturen setter strenge grenser for denne næringen. Likevel produserer vi cirka halvparten av maten vår. Vi er for eksempel selvforsynte med kjøtt, melk, egg og poteter. Resten av maten kjøper vi fra andre land. Vi importerer blant annet mye korn, frukt og grønnsaker.

(10 புள்ளிகள் )

8. **கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 125 சொற்களுக்கு குறையாது கட்டுரை எழுதுக:**

1. தமிழ் இலக்கிய வளம்
    - தமிழின் தொன்மை
    - இனிமை, இளமை, செம்மை
    - முத்தமிழ்ப் பிரிவு
    - தமிழிலுள்ள இலக்கியங்கள்
    - கழகம் அமைத்து தமிழ் வளர்த்தமை

2. பண்டாரவன்னியன்
    - புகழ் பூத்த ஆட்சி
    - வரலாற்றுச் சிறப்பு
    - கைப்பற்றப்பட்ட கோட்டைகள்
    - பீரங்கிகள் கைப்பற்றல்
    - ஆங்கிலேயர் மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்து படையெடுத்தல்
    - பின்வாங்கி மறைந்திருந்து படைதிரட்டல்
    - காட்டிக்கொடுக்கப்படல்
    - உயிர்நீத்தல், நடுகல் அமைத்தல்

(20 புள்ளிகள் )

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------